# தேவனால் மன்னிக்கப்பட்டவன்

GOSPEL 316

***"எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்."* சங்கீதம் 32:1**

நாம் செய்கிற (வேதாகமம் பாவம் என்று கூறும்) தவறான காரியங்கள் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கின்றன. தேவனுடனான நம் உறவைச் சரிசெய்து, நாம் நித்தியத்திற்கு ஆயத்தமாக, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும். வேதாகமம் கூறும் பாவமன்னிப்பு, அந்தப் பாவங்களைக் கண்டுகொள்ளாமல், அவற்றிற்கான நித்திய தண்டனையை இல்லாமல் செய்துவிடுவதல்ல. மாறாக, அந்தத் தண்டனை கொடுக்கப்பட்டே ஆக வேண்டும். [பாவமற்ற தேவனும்-மனிதருமான] இயேசு சிலுவையில் மரித்து, தம் இரத்தத்தினால் உங்களுக்காக அந்தத் தண்டனையை முன்னமே ஏற்றுக்கொண்டார் என்பதுதான் நற்செய்தி (சுவிசேஷம்). அதாவது, உங்கள் இடத்தில் அவர் மரித்தார். இயேசு உங்களுக்குப் பதிலாக பலியானார். ஆனால், அதோடு முடிந்துவிடுவதில்லை. அவர் செய்த பரிகாரம் உங்கள் வாழ்க்கையில் பிரயோகிக்கப்பட வேண்டும் ... அது உங்கள் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும். அது எப்படி நடக்கிறது? என்பதுதான் முக்கியமான கேள்வி. நீங்கள் மனந்திரும்பி (உங்கள் பாவங்களை விட்டு தேவனிடம் திரும்பி), இயேசுவை விசுவாசிக்கும்போது அது நடக்கிறது. அதன் பின்னர் மட்டுமே நீங்கள் தேவனால் மன்னிக்கப்படுகிறீர்கள்.

## *நம்முடைய பிரச்சனை ... பிரிவு*

*"எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,"* ரோமர் 3:23

*"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது."* ஏசாயா 59:2

*"தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்."* 2 தெசலோனிக்கேயர் 1:7-10

*"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."* ரோமர் 6:23

*"அன்றியும், நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்."* ரோமர் 5:6

## *தேவனுடைய தீர்வு ... பதிலீடு*

*"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்."* யோவான் 3:16

*"நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற [கிருபாதாரபலியாகத்] தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது."* 1 யோவான் 4:10

*"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்."* ரோமர் 5:8

*"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."* 1 பேதுரு 2:24

*"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்."* யோவான் 1:12

## *பாவமன்னிப்பிற்கான உங்களுடைய வழி ... இயேசுவை விசுவாசித்தல்*

*"அவரை [இயேசுவை] விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்."* அப்போஸ்தலர் 10:43. *"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;"* எபேசியர் 2:8–9. நீங்கள் மனந்திரும்புவதன் மூலம் (இயேசுவைப் பற்றிய காரியங்களை அல்ல) இயேசுவை விசுவாசிக்கலாம் ... அதாவது, விசுவாசத்தில் நீங்கள் இயேசுவிடம் திரும்ப வேண்டும். அதைச் செய்ய பின்வரும் ஜெபம் உங்களுக்கு உதவும். இது ஒரு பொருத்தனையோ அல்லது மந்திரமோ அல்ல. உண்மையாகவே உங்கள் இருதயத்தில் விருப்பம் இருந்தால், இந்த ஜெபத்தை ஏறெடுக்கவும்.

**அன்புள்ள தேவனே,**
**என் தேவையை ஒப்புக்கொள்கிறேன் ... நான் ஒரு பாவி.**
**மனந்திரும்புகிறேன் ... என் பாவங்களை விட்டு உம்மிடம் திரும்புகிறேன்.**
**இயேசு தேவனாக இருந்தும் எனக்காக சிலுவையில் மரித்தார் ... என்று அவரை விசுவாசிக்கிறேன்.**
**அவரை என் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன்.**
**ஆமென்.**

இயேசு உங்கள் பாவங்களுக்கான பரிகாரத்தை செலுத்திவிட்டார். இயேசுவை விசுவாசிப்பதன் மூலம் அந்த பரிகாரம் உங்களுக்கான பரிகாரமாயிற்று.
நீங்கள் தேவனால் மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள். நித்தியம் வரை உங்களுக்குப் பாதுகாப்பு உண்டென்று இயேசு கூறினார், யோவான் 3:16.

***"எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்."* சங்கீதம் 32:1**

*தேவனால் மன்னிக்கப்பட்டவன்* என்னும் இப்பிரதி Gospel316.org வலைதளத்தில் PDF வடிவில் பல மொழிகளில் உள்ளது.

TAMIL

**இந்த ஜெபத்தை உண்மையில் ஏறெடுத்திருப்பீர்கள் என்றால்,** நீங்கள் தேவனால் மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள், அதோடு நித்திய காலமாக நீங்கள் அவருடன் பாதுகாப்பாக இருப்பீர்கள். தம்மை பலியாக ஒப்புவித்த இயேசுவின் மரணத்தின் மூலம் நீங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறீர்கள். நித்திய வாழ்வு இப்போது உங்களுடைய சொத்தாக மாறியிருக்கிறது என்று தேவன் வாக்குப்பண்ணி இருக்கிறார் … உங்களுக்கு நியாயத்தீர்ப்பில்லை … நீங்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்து வந்துவிட்டீர்கள், யோவான் 5:24. அவருடைய சர்வவல்லமையுள்ள கரத்திலிருந்து யாரும் உங்களைப் பறித்துக்கொள்ள முடியாது என்பதால் நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். நீங்கள் அவரைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பதற்கு மாறாக அவர் உங்களைப் பற்றிப் பிடித்திருக்கிறார். இயேசு இவ்வாறு கூறியிருக்கிறார், *"நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளுவதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது."* யோவான் 10:28-29.

**அந்த ஜெபத்தைச் செய்ய நீங்கள் ஆயத்தமாக இல்லையென்றால்,** அதற்கு முதலாவது முன்னுரிமை கொடுங்கள். நீங்கள் எடுக்கும் தீர்மானம் நித்திய நித்தியமாக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், விளைவும் கொண்டதாகவும் இருக்கிறது. மரணத்திற்குப் பிறகு மற்றொரு தருணம் கொடுக்கப்படமாட்டாது, *"அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,"* எபிரெயர் 9:27. நீங்கள் தீர்மானம் எடுக்கத் தடையாக ஏதேனும் கேள்விகள் இருக்குமானால், இதை உங்களுக்குக் கொடுத்தவரிடம் பேசுங்கள்.

## எடுத்துக்காட்டுகளும் வரையறைகளும்

**பாவமன்னிப்பு.**
பாவமன்னிப்பு. வேதாகமம் கூறும் பாவமன்னிப்பைப் பெற நாம் பாவங்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டும். பாவத்திற்கான தண்டனை நாம் தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்படுவதாகும். உங்கள் பாவத்தையும், அதற்கான தண்டனையையும் எடுத்து அதை இயேசுவின் மீது வைப்பதுதான் வேதாகமம் கூறும் பாவமன்னிப்பாகும். தேவன் நம்முடைய பாவத்தையும், அதன் தண்டனையையும் எடுத்து பாவமற்ற இயேசுவுக்குக் கொடுத்து, அதன் பின்னர் தம்முடைய நீதியை நமக்குக் கொடுத்தார். அது பரலோகத்தில் இரண்டு புத்தகங்கள் இருப்பதைப் போன்றது. முதலாவது உங்களுடைய பதிவு புத்தகம், அதில் நீங்கள் செய்த ஒவ்வொரு தவறுக்கும் அருகில் ஒரு குறியிடப்பட்டிருக்கும். அதன் பக்கங்கள் எல்லாம் அந்தக் குறியீடுகளால் நிறைந்திருக்கும். நாம் செய்யும் சில காரியங்களைப் பாவம் (செய்யும் பாவங்கள்) என்றும், நாம் செய்யாத சில காரியங்களைப் பாவம் (செய்யாத பாவம்) என்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது. நம்முடைய சில எண்ணங்கள் கூடப் பாவமாகலாம். ஒருநாளைக்கு மூன்று பாவங்களைச் செய்கிறோம் என்றால், ஒரு வருடத்திற்கு அதுவே 1000 பாவங்களாகிவிடும். அப்படி என்றால் வாழ்நாள் முழுவதையும் எடுத்துக்கொண்டால், கணக்கே இல்லாத பாவங்களாக இருக்கும். மற்றொரு புத்தகம் பாவமற்ற இயேசுவின் பதிவுகளைக் கொண்டிருக்கிறது. அதன் பக்கங்கள் கறைதிரையின்றி சுத்தமாக இருக்கிறது. நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும்போது, அவ்விரு புத்தகங்களின் அட்டைகளும் மாற்றி வைக்கப்படுகிறது. அதனால், உங்கள் பெயர் கொண்ட பதிவுப் புத்தகம் முற்றிலும் சுத்தமாகிவிடுகிறது. உங்கள் பாவமும் அதற்கான தண்டனையும் இல்லாமல் போய்விட்டது.

**மெய்யான தீர்வு.**
இயேசு, *"அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."* யோவான் 14:6. என்று கூறினார். பாவத்தினால் தேவனிடமிருந்து நாம் பிரிக்கப்பட்டதற்கு வேதாகமம் கொடுக்கும் தீர்வு தனித்துவமானது. மற்ற மதங்கள் சொல்வது என்னவென்றால், நித்தியத்தில் இருக்கும் தெய்வம் எதுவாக இருந்தாலும் அது நம் பாவங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டுவிடும் என்னும் நம்பிக்கையுடன் பாவங்களோடு கூட நித்தியத்தை எதிர்கொள்ள வேண்டும் என்பதாகும், ஆனால் இயேசுவின் வழி தனித்துவமானது, ஏனென்றால் அது நம் பாவங்களை மன்னித்து … நம்மைக் கழுவிச் சுத்திகரிக்கிறது. அதன் பின்னர், நாம் பாவங்கள் நீக்கப்பட்டவர்களாக தேவனையும் நித்தியத்தையும் எதிர்கொள்வோம். காரணம், அவை இயேசுவின் மீது சுமத்தப்பட்டுவிட்டன. அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வாறு கூறினார், *"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."* அப்போஸ்தலர் 4:12. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியதைப் பாருங்கள், *"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது."* 1 தீமோத்தேயு 2:5-6. இயேசுவின் வழியே மெய்யான தீர்வு.

**இயேசுவை விசுவாசித்தல்.**
இயேசுவை விசுவாசிப்பது *இயேசுவைப் பற்றி* விசுவாசிப்பதை விட மேலானது. நீங்கள் ஒரு விமானத்தில் பயணம் செய்வதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். விமானம் மலைகளின் மேல் அதிக உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. திடீரென அதன் எஞ்சினில் ஒரு அதிர்வு ஏற்பட்டுத் தடுமாறி, பயங்கரமாகத் தரையில் மோதும்படி இறங்கிக் கொண்டிருக்கிறது. எல்லோரும் பாராசூட்டை மாட்டிக்கொண்டு, விமானத்தில் அவசரத் திறப்பு வழியாக வெளியேறுமாறு விமானி அறிவிக்கிறார். உங்களுக்குப் பாராசூட் பற்றித் தெரியும். அதைத் தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறீர்கள். ஆனால், இப்போது பார்த்தால் அது வித்தியாசமாக இருக்கிறது. அந்த விமானத்திலிருந்து வெளியேறுவது பாராசூட்டைப் *பற்றி நினைத்திருந்ததை* விட மேலானது … இப்போது நீங்கள் அந்தப் பாராசூட்டையே *நம்ப வேண்டும்.* சிலருக்குக் கிடைக்கும் பாராசூட் சரியாக வேலைசெய்யாது. நீங்கள் உயிர் பிழைப்பதற்கு சரியான பாராசூட் கிடைக்க வேண்டும் … அது இல்லாமல் வெளியே குதித்தால் நிச்சயமாக மரணம் நேரிடும். பாராசூட்டுடன் குதிப்பது 100% அர்ப்பணித்த விசுவாசத்தைப் போன்றது. ஒருசில சந்தேகங்கள் இருக்கலாம் … ஆனால் உயிர்பிழைக்க பாராசூட்டை முற்றிலும் நம்புவது அவசியம். இயேசு ஒரே நித்திய பாராசூட்டாக இருக்கிறார். விசுவாசத்தில் புறப்படுங்கள். அவரை விசுவாசியுங்கள்!

**அச்சிடத் தேவையான குறிப்புகள்.** தாளின் இரு பக்கங்களிலும் அச்சிடுவது நல்லது. வண்ணம் அல்லது கருப்பு-வெள்ளையில் அச்சிடலாம்.

---

ஆக்ட்ஸ் ஒன் எய்ட் வெளியிடும் *தேவனால் மன்னிக்கப்பட்டவன்* © 2024 www.Gospel316.org-லிருந்து எடுக்கப்பட்டது. இதை இலவசமாக அச்சிடவோ, பிரதி எடுக்கவோ, பதிவிடவோ அல்லது செய்தியாக அனுப்பவோ செய்யலாம். ஆனால் இந்த முழுச் செய்தியும் மாறாமல் இருக்க வேண்டும். இருப்பினும், அதில் உங்கள் ஊழியம் அல்லது சபையின் அடையாளச் சின்னத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். வேதாகமத்தின் அடிப்படையில் இயங்கும் ஆக்ட்ஸ் ஒன் எய்ட், மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவும், பின்னர் அவருடைய சீஷர்களாக வளரவும் உதவி செய்கிறது. இதன் ஆங்கிலம் அல்லாத பிற மொழிபெயர்ப்புகளை www.ChristianLingua.com. நிறுவனம் செய்கிறது. ஆங்கிலப் பதிப்பில் நியூ அமெரிக்கன் ஸ்டான்டர்ட் பைபிள் (NASB) வேதாகம மொழியெர்ப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பதிப்பில் உள்ள வேதவசனங்கள் "தமிழ் பரிசுத்த வேதாகமம்" பழைய பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.